**தலைப்பு 230 சட்ட வரைஞர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றுமற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 08 ஆம் திகதிகணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 12 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்ட வரைஞர் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னையஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும், அத் தேவைப்பாடுகளை விட்டு விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.5 பந்தி பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிதி செயலாற்றுகை கூற்றின் மீதி, கட்டுநிதி இணக்க கூற்று பிரகாரம் மீதியின் மற்றும் ஆண்டிறுதியில் கட்டுநிதி மீதியின் கூட்டுத் தொகைக்கு சமமாக வேண்டிய போதும், ஏசீஏ – 3 இல் திசெம்பர் 31 திகதியன்று திறைசேரி புத்தகம் பிரகாரம் ரூபா 6,020 ஆன கட்டுநிதி மீதி நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட்டிருக்காததுடன் அது நிதி நிலைமை மீதான கூற்றில் வழியில் காசாக நிதிசார் சொத்துக்களின் கீழும், கட்டுநிதி மீதியாக நடைமுறை பொறுப்பின் கீழும் காட்டப்பட்டு இருக்கவில்லை. | | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரச கணக்குகள் வழிகாட்டியின் 06 பந்தி பிரகாரம் அறிமுகம் செய்துள்ள காசுப் பாய்ச்சல் கூற்றின் படிவம் பிரகாரம் ஏனைய வருமான தலைப்பிற்காக சேர்க்கப்பட்ட வருமானத்தின் கீழ் காட்ட வேண்டியரூபா 543,683 ஆன வட்டி வருமானம் மற்றும் ஆளுமை விருத்திக்காக மேற்கொண்ட ரூபா 632,890 ஆன செலவை செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சலில் காட்ட வேண்டிய போதும் அவ் வருமானம் மற்றும் செலவினம்முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சலில் காட்டிய காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சலில் ரூபா 89,207 குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான தேறிய சாசுப் பாய்ச்சல் அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு முதல் இடர் கடன் வட்டி வருமானம் ‘‘செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான சாசுப் பாய்ச்சல்’’இன் கீழ் குறிப்பிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும்,‘‘ஆளுமை விருத்தி” இற்காக மேற்கொண்ட ரூபா 632,890 ஆன செலவினம்‘‘2401 – ஆளணி பயிற்சி’’ மூலதன செலவினத்தின் கீழ் மேற்கொண்ட செலவொன்றாவதால் மீண்டெழும் செலவின் கீழ் குறிப்பிடுவது சரியானதல்லாததால் ஆளணி பயிற்சி முதலீட்டு செயற்பாடொன்றாகையால் ஆளுமை விருத்திக்காக மேற்கொண்ட செலவினம் ‘‘முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான காசுப் பாய்ச்சலில் பௌதீக சொத்து நிர்மாணம் மற்றும் கொள்வனவு மற்றும் ஏனை முதலீடுகளை கைப்பற்றுதல்’’ இன் கீழ் காட்டப்பட்டுள்ளது சரியானதென அறிவிக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியான வகைப்படுத்தலின்கீழ் தரவுகளை உள்ளடக்க வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 திகதியன்று வாகனங்களின் பெறுமதி ரூபா 59,975,000 ஆன போதும், அது மீளாய்வாண்டு ஆரம்ப மீதியில் ரூபா 53,700,000 ஆக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. ஆண்டினுள் ரூபா 6,275,000 ஆன வாகனங்கள் பராதீனம் செய்யப்பட்டிருந்த போதும், | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன்.<br><br>அதாவது நிதிக்கூற்றுக்களுடன் இணைத்துள்ள ஏசீஏ 6 படிவப் பத்திரத்தின் தகவல்கள் காண்பிக்கப்பட்டுள்ள விதத்தில் (Display) தவறொன்று காணப்படுகின்றது. எனினும் திணைக்கள CIGAS நிகழ்சித் திட்டத்திற்கு, குறித்த ஆண்டினுள் | ஏசீஏ 6 படிவத்தில் ஆரம்ப மீதியை சரியாக குறிப்பிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றை ஏசீஏ 6 படிவத்திற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | பராதீனம் செய்யப்பட்ட மோடார் வாகனங்களின் பெறுமதி ரூபா 6,275,000 ஆகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 2021 திசெம்பர் 31 திகதியன்று இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 43,049,723 ஆன போதும், அதனை மீளாய்வாண்டு ஆரம்ப மீதி ரூபா 40,863,680 ஆக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. ஆண்டினுள் ரூபா 2,186,043 ஆன இயந்திர மற்றும் உபகரணங்கள் பராதீனம் செய்யப்பட்டிருந்த போதும், அதனை ஏசீஏ 6 படிவத்திற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | ஆண்டினுள் பராதீனம் செய்யப்பட்ட மொத்த இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,186,042 ஆகுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆரம்ப மீதிப் பெறுமதி மற்றும் பராதீன பெறுமதி ஏசீஏ 6 படிவத்தில் சரியாக குறிப்பிட வேண்டும். |
| (iii) | ஆண்டினுள் ரூபா 53,000 இற்கு கொள்வனவு செய்த இயந்திர உபகரண பெறுமதிகள் ஏசீஏ 6 படிவத்தில் கொள்வனவின் கீழ் உட்படுத்தியிருக்கவில்லை. | ஆண்டினுள் இயந்திர உபகரண கொள்வனவு ரூபா 53,000 தொகையாக சரியாக உட்படுத்தியுள்ளதாகஅறிவிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு பெறுமதி ஏசீஏ 6 படிவத்திலும், குறிப்பிட வேண்டும். |
| (iv) | மேலே (i), (ii), (iii) இலான வித்தியாசம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 427 (3) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும்ஏசீஏ 6 படிவத்தில் 2022 திசெம்பர் 31 திகதியன்று இந்த திணைக்களத்தின் சொத்துக்கள் கணக்கின் இறுதி மீதிகள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதால், நிதிக்கூற்றுக்களிற்கு அல்லது சொத்துக்கள் கணக்கிற்கு எவ்வித தாக்கமும் ஏற்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு மூலதன செலவு விடயத்தின் ரூபா 50,000 ஆன மொத்த ஏற்பாடும் சேமிப்பாக இருந்தது. | 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டதால் குறித்த மீண்டெழும் மற்றும் மூலதன விடயங்களில் ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய ஆய்வுடன் கூடியவாறு செலவின மதிப்பீட்டை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீண்டெழும் செலவின விடயங்கள் 02 இல் மற்றும் மூலதன செலவின விடயங்கள்02 இற்கான ஏற்பாடு ரூபா 3,140,000 இல் ரூபா 1,030,071 சேமிப்பாக இருந்ததுடன், அச்சேமிப்பு 25 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையான வீச்சளவை கொண்டிருந்தது. | 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டதால் குறித்த மீண்டெழும் மற்றும் மூலதன விடயங்களில் ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய ஆய்வுடன் கூடியவாறு செலவின மதிப்பீட்டை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3 (xvii) பந்தி பிரகாரம் ஆண்டினுள் செலவு மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் சேமிப்பு காணப்படின் அதனை ஆண்டு முடிவடைய முன்னர் ஏனைய செலவினங்களிற்காக பயன்படுத்த முடியாதெனினும், 04 செலவு விடயங்களில் ரூபா 2,927,000 ஆன ஏற்பாட்டு தொகை நிதிப்பிரமாணம் 66 ஊடாக ஏனைய செலவு விடயகளிற்கு மாற்றப்பட்டிருந்தது. | திணைக்கள செயற்பாடுகளை தடையின்றி பேணிச் செல்வதற்காக மேற்கொள்ள வேண்டிய அத்தியவசியமான செலவுகளை மேற்கொள்ள 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 சுற்றறிக்கை தடையொன்றல்ல. அதனால் அதன் அத்தியவசியமான செலவுகளை மேற்கொள்ள, உரிய அதிகாரியின் அதாவது அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்று நி.பி. 66 கீழ் 04 செலவு விடயங்களின் ஊடாக ரூபா 2,927,000 ஆன ஏற்பாடு தேவையான செலவின விடயங்களிற்காக மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும். |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து பேணிச்செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மைதொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை பயனுறுதிமிக்கதாக பேணிச்செல்ல | இது வரை திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் நிறுவன நடவடிக்கைகள் நிதிப்பிரமாணம் மற்றும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரமான மீளாய்வு கடந்த ஆண்டுகளிலும் இத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படாததுடன் அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொள்ளும் முறை பற்றி | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய போதும், அம் மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொனறை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கவேண்டிருநத் போதும்,அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதற்கான கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | சரியான தெளிவொன்று எமக்கு இல்லையென அறிவிக்க விரும்புகிறேன். அதனால் அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொள்வது தொடர்பாக உங்களின் ஆலோசனையை பெற்றத்தர முடியுமானால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க பொறுப்பேற்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தினுள் தயாரிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால உறுதிப்படுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டிய போதும், அறிக்கையின் 3.2 (அ) பந்தியில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்பு காரணமாக அத்தேவைப்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | 2022 ஆண்டினுள் நாடடினுள் நிலவிய எரிபொருள் பிரச்சினை காரணமாக ஆளணியை கடமைக்கு அழைப்பித்தளை மட்டுப்படுத்திய காரணத்தால், 2021 ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை தயாரிப்பதற்காக தேவையான தகவல்களை குறித்த அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்ட தாமதம் காரணமாக 2021 ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்க தாமதமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத் தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுத்தாய்வு செய்து காட்டப்பட்டுகிறது.

| | **அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | 1645(அ) | • மாதாந்த ஓட்ட பொழிப்பை மாதாந்தம் லொக் குறிப்பு புத்தகங்களில் குறிப்பட வேண்டிய | வாகனங்கள் 06 இத் திணைக்களத்தின் அலுவலர்களுக்காக இணைக்கப்பட்டுள்ளன. அவ் வாகனங்களின் மாதாந்த ஓட்டப் பொழிப்பு, | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| போதும் 09 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை ல. | மாதாந்தம் சமர்பிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களின் மாதாந்த ஓட்ட பொழிப்புக்கள் லொக் புத்தகங்களில் ஆரம்பம் முதல் குறிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>KM 0908 தொகுதி வாகனத்தின் தகவல்கள் 2022 நவம்பர் வரை குறிக்கப்பட்டுள்ளதுடன், 2022 திசெம்பர் மாத ஓட்ட பொழிப்பை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டியுள்ளது 2023 சனவரி 15 திகதிக்கு முன்னராகும். அதனை குறிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. KM 0890 வண்டி பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| • வாகனங்கள் 02 இற்கான திருத்தங்கள் லொக் புத்தகங்களில் உள்ளடக்கி இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. |
| • வாகன விபத்துக்கள் இரண்டு தொடர்பாக லொக் புத்தகங்களில் குறிக்கப்பட்டு இருக்கவில்லை. | KM 0908 மற்றும் KM 0896 ஆகிய வாகனங்களிற்கு ஏற்பட்ட விபத்துக்கள் தவறுதலாக லொக் புத்தகங்களில் உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் அது தொடர்பாக சரியாக செயற்பட நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

(ii) பொது நிர்வாக சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கையின் 3.1 பந்தி | வாகனங்கள் 10 தொடர்பாக எரிபொருள் பாவனை பற்றிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2020, 2021 ஆண்டுகளில் அலுவலக நடவடிக்கைகள் தொடர்சியாக இடம்பெறாமை மற்றும் 2022 நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையினுள் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு விதிக்கப்பட்ட மட்டுப்படுத்தல் காரணமாக எரிபொருள் பற்றிய பரிசோதனையை மேற்கொள்ள முடியாது நிலைமையொன்று காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் வாகனங்களில் எரிபொருள் பாவனையைபரிசோதிக்க வேண்டும். |
| 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட சுற்றறிக்கையின் 01 பந்தி | திணைக்கள மொத்த ஆளணிக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடல் 2018 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும், இது வரை செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டு இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க உரிய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டும். |

(iii) அரச கணக்குகள் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 13 திகதி இலக்கம் 2022/05 கொண்ட வழிகாட்டியின் 8.3 பந்தி | வைப்புக் கணக்கு தொடர்பாக இணக்கக் கூற்று 2023 பெப்ரவரி 28 திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டிய போதும், 2023 மே 23 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது . | 2022 திசெம்பர் 31 திகதியன்று வைப்புக் கணக்கில் எவ்வித மீதியும் காணப்படவில்லை. அவ்வாறாயினும், அரச கணக்குள் வழிகாட்டி 2020/03 பிரகாரம் தயாரிக்கப்பட்ட ‘‘வெற்று அறிக்கை’’ 2023 மே 16 திகதி அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டதாக அறவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குள் வழிகாட்டி பிரகாரம் உரிய திகதிக்கு வைப்புக்களிற்கான இணக்கக் கூற்றை சமர்பிக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இல் 03 பந்தி பிரகாரம் எதிர் வரும் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை திட்டத்தை தயாரித்து நடைமுறை ஆண்டின் திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் பிரதான கணக்கீடு உத்தியோகத்தரிற்கு சமர்பிக்க வேண்டிய போதும், திணைக்களத்தினால் 2022 ஆண்டின் செயலாற்றுகை திட்டததை நீதிமன்ற அமைச்சின் செயலாளரிற்கு 2022 சனவரி 13 திகதி சமர்பிக்கப்பட்டு இருந்தது. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்டுள்ள விடயத்துடன் இணங்குகிறேன். எதிர்காலத்தில் உரிய திகதிக்கு சமர்பிக்க குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து சமர்பிக்க வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டியதாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 12.1 பந்தி பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் செல்ல் முன்னர் பாராளுமன்றத்திற்கு முன்வைக்க சமர்பிக்க வேண்டிய போதும், 2021 ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டு இருந்ததுடன் சுற்றறிக்கையின் 10.2 பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதும், கணக்காய்விற்கு சமர்பித்த செயலாற்றுகை அறிக்கை அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் ஆளணியை அழைப்பித்தல் மட்டுப்படுத்தப் பட்டதனால் 2021 ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை தயாரிப்பதற்கு தேவையான தகவல்களை உரிய அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்ட தாமதம் காரணமாக வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க தாமதித்ததாகவும், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்திபிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இற்கு இணங்க | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரிய தினத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டியதுடன் வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டுள்ளது. அங்கு ஏதேனும் பிழையான இடம் காணப்படுமாயின் அதனை சுட்டிக் காட்டுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று சட்ட வரைபு செய்தல் பூர்த்தி அடையாத 100 அளவானகோரிக்கைகள் எஞ்சி இருந்தன. | 2022.12.31 திகதியன்று வரைபு செய்தல் பூர்த்தியாகாத கோரிக்கைகள் 100 ஆகும். இவைகளை 2022.12.31 திகதி அல்லது அதற்கு கிட்டிய திகதியில் கிடைத்த கோரிக்கை அல்லது இந்த திணைக்களத்தினால் அடிப்படை அல்லது திருத்திய வரைபு அனுப்பப்பட்டு சட்டமா அதிபர் அல்லது அவ் அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் ஆலோசனை அல்லது அவதானிப்பு அல்லது தேவையான அமைச்சரவை அங்கீகாரம் 2022.12.31 திகதி அல்லது அதற்கு கிட்டிய திகதி கிடைத்துள்ள அல்லது இன்னும் கலந்துரையாடும் மட்டத்தில் காணப்படுவதால் இத் திணைக்களத்தால் பூர்த்தி செய்ய முடியாதவை என அறவிக்கப்பட்டிருந்தது. | திணைக்கள செயலாற்றுகைளை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(இ) பிரிவின் பிரகாரம் அடுத்து வரும் ஆண்டிற்கான பெறுகைகள் நடவடிக்கைகளை விரிவாக தயாரிக்க வேண்டிய போதும், திணைக்களத்தினால் அவ்வாறு தயாரித்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் திருத்திய பாதீட்டின் மூலம் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கியிருந்த ஏற்பாடு ரூபா 100,000 அளவானதுடன் அத் தொகையையும் செலவிட அனுமதி கிடைத்தது 2022 ஒக்டோபர் மாதத்தில் இருந்தாகும். அவ்வாறே 2022 ஆண்டில் கொள்வனவு செய்யும் தேவைப்பாடு காணப்பட்டது இரண்டு Voice Recorder இற்கு மாத்திரமே. அதன் பிரகாரம் 2022 ஆண்டில் பெறுகைகள் | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுக்ள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திட்டத்தை திருத்த நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை நிறுவுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை . | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. இத் திணைக்களத்தின் ‘‘உள்ளக கணக்காய்வாளராக’’செயற்படுவது நீதிமன்ற, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் ‘‘பிரதான உள்ளக கணக்காய்வாளர்’’ ஆவதுடன் அங்குபிரதான உள்ளக கணக்காய்வாளரினால் 2022 ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வொன்றை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தில் குறிப்பிடப்படும் உள்ளக கணக்காய்வு தேவைப்பாட்டை நிரைவேற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் நிதிப்பிரமானம் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று திணைக்களத்தின் அங்கீகார ஆளணி 149 ஆன போதும்,உள்ளவாறான ஆளணி 93 ஆனதில் 56 அலுவர்களின் சேவை வெற்றிடங்கள் நிலவின. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகஅறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சட்ட வரைபை உறுவாக்கும் நோக்காகக் கொண்ட சட்ட வரைஞர் திணைக்களத்தின் செயலாற்றலிற்காக நேரடியாக பங்களிப்பை பெறுத்தரும் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்ட 11 பதவிகளில் 04 இற்காக 31 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அதற்காக ஆட்சேர்பு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவ் வெற்றிட எண்ணிக்கை அங்கீகார ஆளணியின் 49 சதவீதமாகும். | இத் திணைக்களத்தின் செயலாற்றலிற்காக நேரடியாக பங்களிப்பு செய்யும் அலுவலர்களின் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறவிக்கப்பட்டுள்ளது. | விரைவில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |